## டிசம்பர் – 14 – வெள்ளி

### புனித சிலுவை அருளப்பர்

### நற்பேறு பெற்றவர் யார்? திபா. 1:1

---------------------------------------------------------------------

**முதல் வாசகம் : ஏசாயா 48 : 17 – 19**

இஸ்ரயேலின் தூயவரும் உன் மீட்பருமான ஆண்டவர் கூறுவது இதுவே உன் கடவுளாகிய ஆண்டவர் நானே! பயனுள்ளவற்றை உனக்குக் கற்பிப்பவரும் செல்லவேண்டிய வழியில் உன்னை நடத்துபவரும் நானே! என் கட்டளைக்குச் செவிசாய்த்திருப் பாயானால், உன் நிறைவாழ்வு ஆற்றைப் போலும், உன் வெற்றி கடல் அலை போலும், பாய்ந்து வந்திருக்கும். உன் வழிமரபினர் மணல் அளவாயும், உன் வழித்தோன்றல்கள் கதிர்மணிகள் போன்றும் இருந்திருப்பர் அவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிரார் அவர்கள் பெயர் என் திருமுன்னின்று அழிக்கப்பட்டிராது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மைப் பின்தொடர்பவர் வாழ்வில் ஒளியைக் கொண்டிருப்பர்.

**நற்செய்தி : மத்தேயு 11 : 16 – 19**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : "இத்தலைமுறையினரை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் சந்தை வெளியில் உட்கார்ந்து மறு அணியினரைக் கூப்பிட்டு, "நாங்கள் குழல் ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை. நாங்கள் ஒப்பாரி வைத்தோம் நீங்கள் மாரடித்துப் புலம்பவில்லை" என்றுகூறி விளையாடும் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள். எப்படியெனில், யோவான் வந்தபோது அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. இவர்களோ "அவன் பேய்பிடித்தவன்" என்கிறார்கள். மானிட மகன் வந்துள்ளார் அவர் உண்கிறார் குடிக்கிறார். இவர்களோ, "இம் மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி தண்டுபவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்" என்கிறார்கள். எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக் கொண்டோரின் செயல்களே சான்று." என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் இறைவன் கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து அதன்படி வாழ்ந்தோமேயானால் உன் வழிமரபினரை மணல் அளவாயும், உன் வழித் தோன்றல்களை கதிர் மணிகள் போன்றும் பெருகச் செய்வேன்'' என்று பலவிதமான ஆசீர்வாதங்களை எமக்கு வழங்குவார் என்பதை இன்றைய முதல் வாசகம் தெரிவிக்கின்றது. (எசா.48:19) இக் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்ந்தோமேயானால் அங்கு அன்பானது நிறைவாகக் காணப்படும். அவ்வன்பானது இறைவனோடு நாங்கள் கொண்டுள்ள அன்பு இறையன்பு என்றும், பிறரோடு கொண்டுள்ள அன்பு பிறரன்பு என்றும் வெளிப்படுகின்றது. இவ்வாறாக நாங்கள் இறைவனை அன்பு செய்கின்றோம் என்பதை எமது அயலவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்களுடன் அன்புடன் வாழ்ந்து. ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் பொழுது இறைவனுக்கே அன்பு செய்கின்றோம். அவரும் எங்களை அன்பு செய்து ஆசிர்வதிப்பார். ஆனால் நாங்கள் பிறரன்பு கொண்டவர்களாக ஒற்றுமையுடன் வாழ்கின்றோமா? போட்டியும், பொறாமையும். விட்டுக் கொடுத்து வாழாத தன்மையும் கொண்டவர்களாகவே வாழ்கின்றோம். அவ்வாறு வாழ்ந்தால் எவ்வாறு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். திருமுழுக்கு யோவான் கிறிஸ்துவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்துவதற்காக உண்ணாமல் குடிக்காமல் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்து மக்களை மனந்திருப்பியும் வந்தார். ஆனால் அவரை அவன் பேய்பிடித்தவன் என்றார்கள். கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்த போது உண்டார், குடித்தார், வேறுபாடின்றி அனைவரோடும் பழகினார். ஆனால் மக்களோ இவன் பெருந் தீனிக்காரன், வரி தண்டுபவர். பாவகளுக்கும் நண்பன் என்று பழித்துரைத்தார்கள்.. (மத்.11:18,19) இதேபோன்றுதான் நாங்களும் நல்லவற்றிற்காக பயன்படுத்தும் நாவினால் நல்லவர்கள் போன்று அவர்கள் முன்பு கதைத்து பின்பு அவர் இல்லாத போது அவரைபபற்றி புறங்கூறுவது. இவ்வாறு வாழ்ந்தோமேயானால் எவ்வாறு எமது சந்ததி பன்மடங்காகப் பெருகும், எமக்கு நிறைவான அசீர்வாதம் கிடைக்கம் எனவே இதை உணர்ந்தவர்களாக அன்பின் கட்டளைகளைக் கடைப்பிடித்து யாவரும சமமே என்று ஒற்றுமையுடன் வாழ எங்களைத் தயார்படுத்துவோம்.